[18th March 1960

(b)—

Year.	Number of cases examined for		Number af articles examined for	
	Private parties including Corporation of Madras.	Government Departments.	Private parties includ ng Corporation of Madras.	Government Departments.
(1)	(2)	(3)	(4)	(5)
1958	2	3,105	14	15,910
1959	6	2,932	32	14,480

Atomic Energy

* 479 *Q.*—SRI A. VEDARTHNAM : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) அணுசக்தியை விவசாய அபிவிருத்திக்குப் பயன்படுத்தும் யோசனை அரசாங்கத்திற்கு உண்டா ?

(ஆ) அது சம்பந்தமாய் என்ன முயற்சி நடைபெறுகிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes, Sir.

(*b*) A scheme for making a start in this direction by undertaking work on limited and specific problems and training the required personnel at the Indian Agricultural Research Institute, New Delhi and at the Atomic Energy Commission, Trombay, is being drawn up.

SRI A. VEDARATHNAM : என்னென்ன துறையில் அவர்களுக்கு இங்கே பயிற்சி அளிக்கப்படுகிறது ? அந்தமாதிரிப் பயிற்சியை நமது மாநிலத்திலேயே நடத்துவதற்கு முயற்சி ஏதாவது உண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்த மாநிலத்தில் கோவையில் ஆராய்ச்சி நிலையம் வைப்பது என்பதில் கவனம் செலுத்தப் பட்டு வருகிறது. முக்கியமாக ரேடியோ ஆக்டிவ் ஐஸோடோப்பிலிருந்து,

(i) Radiation genetics and plant mutation research.

(ii) Use of Radio tracers in plant physiological research, and

(iii) Use of radio tracers especially P. 32 ins oil and fertiliser research.

ஆராச்சிகள் செய்யவேண்டும்.

SRI K. ANBAZHAGAN : விவசாயத்திற்கு அணுக் கதிரை பயன்படுத்துவதற்கு மின்சார நிலையம் அதைத் தொடர்ந்து அமைக்கப் படவேண்டும் என்பதால், அப்படி அமைக்க முயற்சிகள் எடுக்கப் படுகின் றனவா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அது வேறு விஷயம். அதைப் பற்றியும் கவனம் செலுத்தப் பட்டு வருகிறது.

SRI A. GOVINDASAMY : அண்மையில் உலக விவசாய பொருட்காட்சியில் அமெரிக்கன் பெவிலியனில் அடாமிக் எனர்ஜியை விவசாயத்திற்குப் பயன்படுத்துவது பற்றி விளக்கிக்காட்டினார்களே, அதை நம் அதிகாரிகள் பார்த்து அதைப் பயன்படுத்தக் கூடிய நடவடிக்கைகள் ஏதாவது எடுக்கப் படுகிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதிகாரிகளும், விவசாயிகளும் பார்த்து வந்திருக்கிறார்கள். பொதுவாக, நான் முன்பு சொன்னது போல், விவசாயத்திற்குப் பயன்படுத்த ஆராய்ச்சி நிலையம் கோவையில் அமைப்பதைப்பற்றி யோசனை செய்யப்பட்டு வருகிறது.